# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 111 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 19.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# “தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட உறுதியேற்போம்” முதலமைச்சர் விஜய் பேச்சு




சென்னை: தமிழ்நாடு நாளை ஒட்டி "சங்கம் கண்ட செம்மொழியின் தாயகமாக, சமத்துவமும், சமூகநீதியும் தழைத்தோங்கி, கல்வியிலும், தொழில்நுட்பத்திலும்,திறன்மிகு மனிதவளத்திலும் சிறந்தோங்கும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட இந்நாளில் உறுதியேற்போம்" என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.


முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தமிழரின் தொன்மை,வரலாறு, பண்பாடு, மொழியுணர்வைப் போற்றும் வகையில் நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இந்நாளில், தமிழ் மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த 'தமிழ்நாடு நாள்' நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மெட்ராஸ் மாநிலமாக உருவான நவம்பர் 1-ஆம் நாளையும், 'தமிழ்நாடு' எனும் பெயர் சூட்ட பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஜூலை 18-ஆம் நாளையும் இந்த அரசு கொண்டாடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கம் கண்ட செம்மொழியின் தாயகமாக, சமத்துவமும், சமூகநீதியும் தழைத்தோங்கி, கல்வியிலும், தொழில்நுட்பத்திலும்,திறன்மிகு மனிதவளத்திலும் சிறந்தோங்கும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட இந்நாளில் உறுதியேற்போம்!

தமிழின் இனிமையும், தமிழரின் உயரிய பண்பாடும், மனிதநேய மரபும் தலைமுறைகள் கடந்தும் தழைத்தோங்கட்டும். தமிழ்நாடு உருவாக உழைத்திட்ட தியாக சீலர்களை இந்நாளில் நினைவுகூர்ந்து வணங்கிடுவோம்!" என்று தெரிவித்துள்ளார்.

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது இந்தியாவின் முதல் தனியார் ஆர்பிட்டல் ராக்கெட் ‘விக்ரம்1’



சென்னை: இந்திய விண்வெளி வரலாற்றில் புதிய மைல்கல்லாக,உள்நாட்டு தனியார் நிறுவனத்தால் முழுமையாக வடிவமைக்கப்பட்ட முதல் ஆர்பிட்டல் வகை ராக்கெட்டான 'விக்ரம்-1' இன்று (ஜூலை 18) வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீ ஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து இந்த வரலாற்று சிறப்புமிக்க முயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

11.30 மணிக்கு விக்ரம்-1 ராக்கெட் விண்ணில் ஏவதிட்டமிடப்பட்டிருந்த நிலையில், மேகமூட்டம் சார்ந்த வானிலை காரணமாக 35 நிமிடம் தாமதமாக பகல் 12.05க்கு விண்ணில் ஏவப்பட்டது.

ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய விண்வெளித்துறையின் IN-SPACe அமைப்பின் தலைவர் பவன் கே கோயங்கா, "இந்தியாவின் தனியார் துறை சார்ந்த முதல் ஏவுதல் முயற்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது என்பதை முறைப்படி அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். விக்ரம்-1 ராக்கெட் 453 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள சுற்றுப்பாதையில்நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது எதிர்பார்ப்புகளையும் தாண்டிய ஒரு சாதனை" என தெரிவித்துள்ளார்.

ராக்கெட் ஏவப்படுவதை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைஅமைச்சர்ஜிதேந்திர சிங் நேரில் பார்வையிட்டார். ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதை அடுத்து அவர், இந்த திட்டத்தில் தொடர்புடைய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமான 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' தயாரித்துள்ள இந்த ராக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளநிலையில்,அதற்கு முன்னதாகவே பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் தனது எக்ஸ் பதிவில், "இந்திய விண்வெளிப் பயணத்தில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய மைல்கல். இன்று காலை 11.30 மணிக்கு ஸ்கைரூட் ஏரோஸ் பேஸ் நிறுவனம்,இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டான விக்ரம்-1 ஐ வெற்றிகரமாக ஏவும்.

விரைவான மற்றும் தேவைக்கேற்ப ஏவுதல் சேவைகளை வழங்கும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நமது இளைஞர்களின் திறமை, உறுதி,தொழில்முனைவு மனப்பான்மை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

மேலும், நமது விண்வெளித்துறை சீர்திருத்தங்கள், புத்தாக்கம், தொழில்முனைவுக்கான புதிய வாய்ப்புகள் ஆகியவற்றை எவ்வாறு உருவாக்குகின்றன என்பதையும் இது காட்டுகிறது.

இந்த வெற்றிகரமான ஏவுதலுக்காக ஸ்கைரூட் ஏராஸ்பேஸ் குழுவினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள். விக்ரம்-1 வானில் உயர்ந்து, சரித்திரம் படைத்து, ஒரு தலைமுறை புத்தாக்கவாதிகளுக்கு உத்வேகம் அளிக்கட்டும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் வெற்றியை அடுத்து, #IndiaWithVikram1 என்ற ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி ஸ்கைரூட் குழுவின் வெற்றிக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்குமாறு அனைத்து இந்தியர்களையும் குறிப்பாக எனது இளம் நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

'மிஷன் ஆகமன்:

'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' என்ற தனியார் நிறுவனம் தயாரித்துள்ள இந்த ராக்கெட்டின் பயணத்துக்கு 'மிஷன் ஆகமன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவை சேர்ந்த தனியார் நிறுவனம், தான் சொந்தமாக உருவாக்கிய ஏவுதளத்தை பயன்படுத்தி செயற்கைக் கோளை விண்வெளி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த முயற்சிப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த பயணத்தின் நோக்கம் ஒர் செயற்கைக் கோளை மட்டும் விண்ணில் செலுத்துவது அல்ல. மாறாக, ராக்கெட்டின் அனைத்து நிலைகளும் விண்வெளி பயணத்தின் போது எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நேரடியாக மதிப்பீடு செய்து தரவுகளை சேகரிப்பதே இந்த சோதனையின் பிரதான இலக்காகும்.

350 கிலோ வரை எடை கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான செயற்கைக் கோள்களை 450 கிமீ தூரத்தில் பூமியின் தாழ்வான சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959


## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் ஜூலை 22 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் ஜூலை 22-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழகப் பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ உயரத்திலிருந்து 7.6 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. வடக்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ உயரத்திலிருந்து 7.6 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் (ஜூலை 19) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

20-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், 21, 22 தேதிகளில் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், 23, 24 தேதிகளில் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்கள், வட கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழத்தில் நாளை முதல் 22-ம் தேதி வரை கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை ஒட்டியும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாகவும் இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாகசென்னை பள்ளிக்கரணையில் 5 செமீ, சென்னை விஜடியில் 4 செமீ, அண்ணா நகர்,கொரட்டூரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## நெல்லை சீதபற்பநல்லூர் அருகே உள்ள

# முத்தன் குளத்தில் சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்ட கால்கோள் விழா

சுப்ரீம் ஸ்டார் ஆர். சரத்குமாரின் 72 வது பிறந்தநாளைமுன்னிட்டு நெல்லை மாவட்டம் சீதபற்பநல்லூர் அருகே உள்ள முத்தன்குளம் மெயின் ரோடு அருகில் நடைபெற்றது அகில இந்திய சரத்குமார் ரசிகர் நற்பணி மன்ற ஒருங்கிணைப்பாளரும் பாஜக மாநில துணைத் தலைவருமான என்.சுந்தர் கலந்து கொண்டு பந்தல்கால் நாட்டி துவக்கி வைத்தார்.



பற்பநல்லூர் அருகே உள்ள முத்தன் குளத்தில் வருகின்ற 25ம்தேதி பொதுக்கூட்டம் நடைபெறுகிறது பிறந்தநாள் விழா பொதுக் கூட்டத்திற்கான கால்கோள் விழா நேற்று 17.07.2026 சீதபற்பநல்லூர் அருகே உள்ள முத்தன்குளம் மெயின் ரோடு அருகில் நடைபெற்றது அகில இந்திய சரத்குமார் ரசிகர் நற்பணி மன்ற ஒருங்கிணைப்பாளரும் பாஜக மாநில துணைத் தலைவருமான என்.சுந்தர் கலந்துகொண்டு பந்தல்கால் நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சரத்குமார் ரசிகர் மன்ற நெல்லைமாவட்டதலைவர் சரத் ஆனந்த்.நிர்வாகிகள் சரத் கண்ணன். அரசு கண்ணன்.அழகேசன். சுபலதா.இளஞ்செழியன். கோவை உமைதூர் ரகுமான். தென்காசி மாவட்ட தலைவர் டி.ஆர். தங்கராஜ்.இளஞ்செழியன்.ராஜ்கண்ணன். மகேஷ்.ஜி. சுரேஷ்.உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து பலர் கொண்டனர்.

# கோவை ஸ்போர்ட்ஸ் அகாடமியில் நடைபெற்ற 8 வது ஜூனியர் மற்றும் சீனியர்களுக்கான அத்லெட்டிக் சாம்பியன்ஷிப் போட்டி

## பள்ளி மாணவர்களின் விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்றது; இதில் மாணவ,மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்பு




கோவையில், பள்ளி மாணவ மாணவியர்களிடையே விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் விதமாக கோவை ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பாக ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன..

இதன் தொடர்ச்சியாக,8 வது ஜூனியர் மற்றும் சீனியர்களுக்கான தடகள போட்டி கோவை நேரு ஸ்டேடிய மைதான அரங்கில் நடைபெற்றது ...

கோவை ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பாக இரண்டு நாட்கள் நடைபெற உள்ள போட்டிகளுக்கான துவக்க விழா, கோவை ஸ்போர்ட்ஸ் அகாடமியின் நிறுவனர் பரசுராம் தலைமையில் நடைபெற்றது..

இதில் சிறப்பு விருந்தினர்களாக,மண்டல பி.எஃப்.ஆணையர் பிரணவ்,,சன் ஸ்மார்ட் சரவணன்,ரோட்டரி கிளப் இண்டஸ்ட்ரியல் சிட்டி தலைவர் திருப்பதி ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்தார்..

ஜூனியர் மற்றும் சீனியர் பிரிவுகளில் நடைபெற்ற இதில் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், தொடர் ஓட்டம் உயரம் தாண்டுதல்,ஈட்டி எறிதல்,குண்டு எறிதல்,உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றது.

இதில்,கோவை உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவ,மாணவிகள் கலந்து கொண்டனர்..

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கோவை ஸ்போர்ட்ஸ் அகாடமி தலைவர் பரசுராமன் மற்றும் துணை தலைவர் கிருஷ்ணகுமார், செயலாளர் ஸ்ரீதர் மற்றும் நிர்வாகிகள் இணைந்து செய்திருந்தனர்..

# கோவையில் பேரூர் தமிழ்க் கல்லூரி மற்றும் பல்சமயம் நல்லுறவு இயக்கம் ஆகியவை இணைந்து

## கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி மற்றும் நாடகம் நிகழ்த்தப்பட்டது

பல்சமய நல்லுறவு இயக்கம் சார்பில் போதை பொருளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியானது பல வகையில் இன்று முதல் நிகழ்ச்சியாக கோவை பேரூர் தமிழ் கல்லூரியோடு இணைந்து போதைபொருள் எதிர்ப்பு வெளியிடப்பட்டு மாணவர்ளுக்கு திரையிட்டு காண்பிக்கப்பட்டது.இது குறித்து பேசிய பல்சமயம் நல்லுறவு இயக்கத்-




ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது .அந்த வகையில் தற்போது தமிழகம் முழுவதும் கல்லூரி மாணவர்களுக்கு போதைப் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நாடகம் வடிவிலும் ,பேரணி மூலமாகவும் பல்வேறு நிகழ்சிகளை நடத்ததிட்டமிடப்பட்டுள்ளது.அந்த விழிப்புணர்வு பேரணி மற்றும் நாடகம் நிகழ்த்தப்பட்டது.பேரூர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் மற்றும் பல்சமயம் நல்லுறவு இயக்கத்தின் தலைவர் முகமது ரபீக் தலைமையில் நடைப்பெற்ற இந்த நிகழ்ச்சியில் பல்சமயம் சார்பில் எடுக்கப்பட்ட போதை பொருள் எதிர்ப்பு குறித்து எடுக்கப்பட்ட பாடல் திம் தலைவர் முகமது ரபீக் ,இது போன்ற போதைபொருள் எதிர்ப்பு நிகழ்ச்சி தமிழகம் முழுவதும் கல்லூரிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ,எதிர்கால தலைமுறையினரை நல்வழிப்படுத்த பல்சமயம் இயக்கம் பல்வேறு முயற்சிகளை எடுக்கும் எனத்தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



தென்காசி மாவட்டம் சுரண்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பி. மதுசூதனன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறை, 15ஆவது நிதிக்குழு மானியம் (Untied Grant) மற்றும் பொதுநிதியின் கீழ் 11வது வார்டு தாயார்தோப்பு சாலையிலுள்ள நுண் உரக்குடிலில் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் தனித்து விடப்பட்ட, நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கான தங்குமிடம் அமைக்கும் பணிக்கு கூரைக்கான சென்டரிங் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# மதுராந்தகம் அருகே பள்ளி மாணவர்களுக்கு பேருந்து சேவை துவக்கம்

செங்கல்பட்டு மாவட்டம் கள்ளபிரான் புரம் ஊராட்சியில் இருந்து பள்ளி மாணவ மாணவிகளுக்காக சிற்றுந்து தனசேகரன் கொடியேசத்து துவக்கி வைத்தார்.

இந்தசிற்றுந்துபேருந்து சேவை ஆனது காலை மேல்மா கிராமத்தில் யானது காலை மற்றும் மாலை வேலைகளில் பள்ளி மாணவ மாணவிகளுக்காக இயக்கப்படுகிறது.



பேருந்து சேவை மேட்டு காலனி பகுதியில் துவக்க விழா நடைபெற்றது இந்த சிற்றுந்து பேருந்து சேவையினை ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா இருந்து சூறை நெய்குப்பி கள்ளபிரான்புரம் அத்திமனம் வழியாக மதுராந்தகம் வரை செல்லக்கூடிய இந்த பேருந்து சேவை-

இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சீனு உட்பட வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தொளசம்பட்டியில் கூட்டுறவு கடன் சங்க இடத்தில் பெட்ரோல் பங்க் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர்

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டி பகுதியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கவேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் நீண்ட காலமாக அரசிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான மானத்தால் பகுதியில் உள்ள இடத்தில் பெட்ரோல் நிலையம் அமைப்பதற்காக தடையில்லா சான்று (NOC) கோரி விண்ணப்பி க்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தொளசம்பட்டி பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் TE. போத்தன், பிரபாகரன் மணி மற்றும் வழக்கறிஞர் பிரபாகரன் ஆகியோர் தலைமையில், 100-க்கும் மேற்பட்டோர் சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில், கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் பெட்ரோல் நிலையம் அமைப்பதற்கு தடையில்லா சான்று வழங்கக் கூடாது என்றும், அந்த இடத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.



மேலும், பொதுமக்களின் கோரிக்கையை மீறி பெட்ரோல் நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டால், அப்பகுதி மக்களை ஒருங்கிணைத்து பல கட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மனுவில் கூறியுள்ளானார்.

# நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் சார்பில் வளாகத்தேர்வு

நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் இறுதியாண்டு பயின்று வரும் கணினி அறிவியல் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கென ஸோஹோ கார்ப் நிறுவனத்தின் வளாகத் தேர்வு அண்மையில் நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்வளாகத் தேர்வில் "ஸோஹோ கார்ப்" நிறுவனத்தின் மனித வள மேலாளர் சங்கர் சுப்பையா கலந்துக் கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்

மேலும்,பொறியியல்கல்லூரியின்முதல்வர்முனைவர் யு.எஸ். ரகுபதி, மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பின்னர் "ஸோஹோ கார்ப" நிறுவனத்தின் மனிதவள மூத்த மேலாளர் சங்கர் சுப்பையா அவர்கள் உரையாற்றுகையில், சென்னையினை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் எங்களது நிறுவனம் முழு வணிகத்தையும் நிர்வகிக்கும் சக்தி



வாய்ந்த மற்றும் தனித்துவமான மென்பொருள்களை குறிப்பிட்ட நேரத்தில் மிகுந்த கவனத்துடன் தயார்செய்து கொடுத்து வருவதாகத் தெரிவித்தார். உலகில் இயங்கிவரும் அடையாளம் மற்றும் அணுகல் மேலாண்மை, நிறுவனச் சேவை மேலாண்மை, தகவல் தொழிநுட்ப செயல்பாட்டு மேலாண்மை, பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை போன்ற துறைகளுக்குஅதிகஅளவில்செயற்கைநுண்ணறிவுடன் கூடிய மென்பொருள்களின் தேவை அதிகரித்து வருகின்றன என்றார். இதன் அடிப்படையில் சிறந்த மென்பொருள்களை உற்பத்தி செய்வதற்காக தங்களைப் போன்ற பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் பயின்று வெளியேறும் மாணவர்களின் தேவையினைக் கருத்தில் கொண்டு இவ்வளாகத் தேர்விற்கு வந்துள்ளதாக மாணவர்களிடம் கூறினார். மேலும், சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முதலில் எழுத்து தேர்வும், அதனைத் தொடந்து குழு விவாதமும் நடைபெறும் என்றும், பின்னர் மாணவர்களின் தனித்திறன்களின் அடிப்படையில் மாதம் 5 முதல் 8 இலட்சம் வருட சம்பளம் பெறும் வகையில் நிரந்திர பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று அந்நிறுவனத்தின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இத்தேர்வினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித் துறையின் ஆசிரியர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப்,எஸ். திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.



தூத்துக்குடி 42வது வார்டு திமுக சார்பில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடிவ.உ.சிமார்க்கெட்பகுதிஅருகேஅமைந்துள்ள காமராஜர் திருவுருவ சிலைக்கு திமுக பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியின்

# 36 வது மாணவர் மன்றத் தொடக்க விழா நிகழ்ச்சி கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள எஸ்என்ஆர் கலையரங்கில் நடைபெற்றது

கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள, ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் 36வது மாணவர் மன்றத் தொடக்க விழா கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள எஸ்என்ஆர் கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கோவை ப்ளூயாண்டர் நிறுவனத்தின் வாடிக்கையாளர் வெற்றி மற்றும் க்ளவுட் செயல்பாடுகள் பிரிவின் துணைத்தலைவர்மகிமா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். மாணவர் மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற நிர்வாகிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த அவர், மாணவிகள் தலைமைத்திறன், தன்னம்பிக்கை மற்றும் பொறுப்புணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவை என வலியுறுத்தினார்.மாணவிகள் தங்களது நேரத்தை உழைப்பை தங்கள் திறமைமைகளை வளர்த்துக் கொள்வதில் முதலீடு செய்ய வேண்டும் என்ற அவர், தொழில்துறையின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப அறிவு, தகவல் தொடர்புத்திறன், குழு ஒருங்கிணைப்புத்திறன், உள்ளிட்ட பல்வேறு வாழ்வியல் திறமைகளை தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.



நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய எஸ். என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் முனைவர் சுந்தர் ராமகிருஷ்ணன் மாணவர்கள் மத்தியில் கூறியதாவது.. மாணவர் மன்றப் பொறுப்புகள், சேவை மனப்பான்மை, ஒற்றுமை மற்றும் நிர்வாக அனுபவங்களை பெற உதவும் சிறந்த வாய்ப்பாக அமையும். எனவே மாணவர் மன்ற நடவடிக்கைகளில் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்றுத் தங்கள் திறமைமை களை வளர்த்துக் கொண்டு கல்லூரியின் உயர்த்தும் வகையில் செயல்பட வேண்டும் என கூறி மாணவிகளை ஊக்குவித்தார். இந்த நிகழ்ச்சியில் கல்லூரியிடன் முதல்வர் முனைவர் கி.சித்ரா கூறியதாவது.., மாணவர் மன்ற தேர்தலில் வெற்றி பெற்ற பொறுப்பாளர்கள் தங்களது பொறுப்புகளை நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் நிறைவேற்ற உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து மாணவர் மன்ற நிர்வாகிகள் உரையாற்றினர். தொடர்ந்துகலைநிகழ்ச்சிகளுடன் கல்லூரி அளவிலான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# Yifi தொழில் முனைவர்களுக்கான மாநாடு 2026

## செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்; மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வேண்டுகோள்



மதுரை சர்வதேச விமான நிலையம் செல்லும் சாலையில் உள்ள டி ரெசிடென்சி சிக்னேச்சர் என்ற தனியார் நட்சத்திர விடுதியில் yifi தொழில் முனைவர்களுக்கான மாநாடு 2026 மூன்று நாட்களாக நடைபெற்று வருகிறது. நிறைவு நாளான இன்று மாநாட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மத்திய நிதியமைச்சர் பேசும்போது:

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்முனைவோர் சூழல்

உலகளாவிய சவால்களும் இந்தியாவின் வளர்ச்சியும் உக்ரைன் போர், இஸ்ரேல்-ஈரான் பதற்றம், சரக்குக் கப்பல்கள் சரியான நேரத்தில் வந்து சேராதது, எண்ணெய் மற்றும் எரிவாயு சிக்கல்கள், உரங்களின் விலை உயர்வு போன்ற பல்வேறு உலகளாவிய சவால்களுக்கு மத்தியிலும், இந்தியா உலகிலேயே மிக வேகமாக வளர்ந்துவரும் முக்கியப் பொருளாதார நாடாகத் திகழ்கிறது. டிஜிட்டல் புரட்சி நமது டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (Digital Public Infrastructure) சர்வதேச அளவில் ஒரு முன்மாதிரியாக மாறியுள்ளது. யுபிஐ (UPI) தளம் ஒவ்வொரு மாதமும் 20 பில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளைக் கையாள்கிறது.

உலகளாவிய திறன் மையங்கள் (GCCs): இந்தியாவில் தற்போது 2,100 உலகளாவிய திறன் மையங்கள் உள்ளன. இவை பெருநகரங்களைத் தாண்டி இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களுக்கும் விரிவடைந்து வருகின்றன.

அரசின் புதிய பங்கு 2014-ஆம் ஆண்டு முதல் பிரதமர் மோடியின் தலைமையில், அரசு தன்னை ஒரு "கட்டுப்பாட்டாளராக" (Controller) பார்க்காமல், தொழில்களை "ஊக்குவிக்கும் அமைப்பாக" (Enabler) மாற்றி அமைத்துள்ளது. அவசர கால கடன் உத்தரவாதத் திட்டம் (ECLGS) மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSMEs) அரசு தொடர் ஆதரவை வழங்கி வருகிறது.

30 ஆண்டுகளுக்கு முன்பும் இன்றும்

"30 ஆண்டுகளுக்கு முன்பு மின்சாரப் பற்றாக்குறை இருந்தது. ஒரு சாதாரண தொலைபேசி இணைப்புபெறநாடாளுமன்றஉறுப்பினரின்(MP) பரிந்துரை தேவைப்பட்டது. ஆனால் இன்று தொழில்நுட்ப வளர்ச்சியால் அனைத்தும் உங்கள் கைபேசியிலேயே (Mobile Phone) சாத்தியமாகியுள்ளது. பிரான்ஸ் நாட்டுத் தொழில்முனைவோர் கூட இந்தியாவின் MSME-களுடன் இணைய விரும்புகிறார்கள். எனவே, இந்தத் தலைமுறை இளைஞர்கள் தங்களது தயக்கங்களை உடைத்து முன்வர வேண்டும்."

திருக்குறள் உவமையும் லட்சிய மாவட்டங்களின் வளர்ச்சியும்

நமது புனித திருவள்ளுவரின் உன்னதமான வரிகளை நாம் இங்கு நினைவுகூர வேண்டும்

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு."

(தண்ணீரின் உயரத்திற்கு ஏற்ப தாமரை மலரின் தண்டு நீள்வது போல, மனிதர்களின் உள்ளத்து ஊக்கத்தின் அளவிற்கேற்பவே அவர்களின் உயர்வு அமையும்.

சவால்கள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், நமது முயற்சியின் மூலம் அவற்றைக் கடந்து நாம் உயர முடியும் என்பதற்கு இந்த அரசு எடுத்துள்ள திட்டங்களே சான்று மேம்பாட்டுக்கு விழையும் மாவட்டங்கள் (Aspirational Districts): நாட்டின் பின்தங்கிய 114 மாவட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை 'லட்சிய மாவட்டங்கள்' என்று அழைத்து, அனைத்து அரசுத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து மேம்படுத்தினோம்.

தமிழகத்தில் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்கள் இதில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு முன்னிலையில் உள்ளன.உள்ளூர்தயாரிப்புகளின் உலகளாவிய சந்தை சிட்பி (SIDBI) வங்கி விருதுநகரில் ஒரு பிரிவைத் தொடங்கி, அங்குள்ள புகழ்பெற்ற 'விருதுநகர் வத்தல்' (மிளகாய்) வணிகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது.

உலக அரங்கில் இந்தியாவின் சாதனை இன்று இந்தியா உலக அரங்கில் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக நிமிர்ந்து நிற்கிறது

அணுக்கரு இணைவு தொழில்நுட்பம் (Nuclear Fusion): பிரான்சில் நடைபெறும் சர்வதேச 'ஐடிஇஆர்' (ITER) அணுக்கரு இணைவு ஆராய்ச்சித் திட்டத்தில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கிறது. எல் அண்ட் டி (L&T) நிறுவனத்தின் இந்தியப் பொறியாளர்கள் இந்த அதிநவீன எதிர்கால தொழில்நுட்பத்திற்கான மாபெரும் அணுக்கரு கருவிகளை உருவாக்கி வழங்கி வருகின்றனர். உலகின் மிக முக்கிய ஐந்து நாடுகளின் கொடிகளுக்கு நடுவே இந்தியாவின் கொடியும் அங்குப் பெருமையுடன் பறக்கிறது.

துருவ ஆராய்ச்சி மற்றும் விண்வெளி சாதனைகள் ஆர்க்டிக் மற்றும்அண்டார்டிகாஆகிய இரு துருவப் பகுதிகளிலும் இந்தியா தனது ஆராய்ச்சிப் பயணங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. விண்வெளியில், நிலவின் தென்துருவத்தில் (South Pole) இதுவரை எந்தவொரு நாடும் கால் வைக்காத இடத்தில் இந்தியா தனது முத்திரையைப் பதித்து சாதனை படைத்துள்ளது.

"இத்தகைய அசாதாரணமான சாதனைகளில் நீங்களும் ஒரு பங்காக மாறவேண்டாமா?தைரியமாக உருவாக்குங்கள், பொறுப்புடன் உருவாக்குங்கள். இந்தியாவிற்காகவும், உலகிற்காகவும், வரவிருக்கும் தலைமுறைகளுக்காகவும் உருவாக்குங்கள். விக்சித் பாரத் 2047 (வளர்ந்த இந்தியா 2047) இலக்கை நோக்கி ஒன்றிணைந்து பயணிப்போம்!"

வாழ்க பாரதம்! வாழ்க தமிழ்நாடு!எனஉரையை நிறைவு செய்தார்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூர் அருகில் ஓடாநிலை ஜெயராமபுரத்தில் அமைந்துள்ள மாவீரன் பொல்லான் நினைவு நாளை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வில் நம் அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவையின் மாநில தலைவர் P.அய்யாசாமி , மாநில பொருளாளர் V.ஜெயராமன், மாவட்ட தலைவர் G. தங்கவேல் உட்பட மாவட்ட நிர்வாகி ஜீவா சுரேஷ் உடன் பொல்லான் பேரவையின் நிறுவனர் மற்றும் தலைவர் வடிவேல் ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாநகராட்சியில் புதிய பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் பெறுவதற்கு அறிவிப்பு

ஈரோடு மாநகராட்சியில் புதிய பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் பெறுவதற்கு ஈரோடு மாவட்ட அரசிதழ்,ஈரோடு.



அக்டோபர் 13,2020., உள்ளாட்சித் துறை அறிவிக்கையின் படி,பாதாள சாக்கடைத் திட்டத்தின் உப விதியின் படி (By-Law) வைப்புத் தொகையாக 500 சதுர அடி பரப்பளவு வரை உள்ள கட்டிடத்திற்கு ரூ.7500/- என்ற அளவிலும் 501 சதுர அடி முதல் 1200சதுரஅடிவரைஉள்ள கட்டிடத்திற்கு ரூ.10,000/- என்ற அளவிலும், 1201 சதுர அடி முதல் 2400சதுரஅடிவரைஉள்ள கட்டிடத்திற்கு

ரூ. 12500/- என்ற அளவிலும், 2041 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடத்திற்கு ரூ.15,000/- என்ற விகிதம் மற்றும் கூடுதலான ஒவ்வொரு சதுர அடிக்கும் கணக்கீடு செய்யப்பட்டு மென்பொருள் வாயிலாக முறையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வடிவமைக்கப்பட்ட வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேலும், தொழிற்சாலை மற்றும் வணிக உபயோக கட்டிடங்களுக்கு புதிய பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவதற்கு 500 சதுர அடி பரப்பளவு வரை உள்ள கட்டிடத்திற்கு ரூ.15,000/- என்ற அளவிலும்,501 முதல் 1200 சதுர அடி பரப்பளவு வரை உள்ள கட்டிடத்திற்கு ரூ.20,000/- என்று அளவிலும், 1201 முதல் 2400 சதுர அடி பரப்பளவு வரை உள்ள கட்டிடங்களுக்கு ரூ.25000/- மற்றும் 2401-க்கு மேற்பட்ட இணைப்புகளுக்குவைப்புத்தொகையாக ரூ.30000/- என்ற விகிதம் மற்றும் கூடுதலாக ஒவ்வொரு சதுர அடிக்கும் கணக்கீடு செய்யப்பட்டு மென்பொருள் வாயிலாகவடிவமைக்கப்பட்ட முறையில் மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

இது தவிர மேற்கண்ட வைப்புத் தொகையுடன் பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.100/-, மேற்பார்வை கட்டணம் ரூ.100/-இணைப்பு கட்டணம் ரூ.100/- மற்றும் சாலை சீரமைப்பு கட்டணம் வகையிலான கட்டணங்கள் மட்டுமே புதிய பாதாள சாக்கடை இணைப்புகள் பெற இம்மாநகராட்சியில் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டணங்கள் அனைத்தும் மாநகராட்சி அலுவலகத்தில் நேரடியாக செலுத்தி உரிய ரசீதினைபெற்றுக்கொள்ளுமாறு பாதாள சாக்கடை இணைப்பு பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட கட்டணங்கள் மற்றும் மாதாந்திர சேவைகட்டணம் தவிர வேறு எந்த கட்டணமும் மாநகராட்சியால் வசூலிக்கப்படமாட்டாது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.மேலும்,புதிய பாதாள சாக்கடை இணைப்பு பெறவுள்ள விண்ணப்பதாரர்கள் சோதனை குழி (Inspection Chamber bit) மற்றும் குழாய் இணைப்பு பணிகளை தமது சொந்த செலவிலேயே மேற்கொள்ள வேண்டும் என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

## தூத்துக்குடியில் காமராஜரின் 124வது பிறந்தநாள் விழா: பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினர்

தூத்துக்குடி மேற்கு வட்டார காங்கிரஸ் கமிட்டிசார்பில்,வட்டாரத்தலைவர்அபிஷேக் திவாகர் மற்றும் தூத்துக்குடி காங்கிரஸ்



வடக்கு மாவட்ட தலைவர் பெருமாள் சாமி தலைமையில், புதுக்கோட்டை சிவந்தி ஆதித்தனார் மன்றம் முன்பு பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் கலந்து கொண்டு, பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதைசெலுத்தினார்.பின்னர் பொதுமக்களுக்கு 124 பேருக்கு பிரியாணி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டதுணைத் தலைவர் ஏசுவடியன், மாவட்ட செயலாளர் சங்கரபாண்டியன்,புதுக்கோட்டைகாங்கிரஸ் தலைவர் டேனியல், நிர்வாகிகள் முருகன், உலகநாதன், அந்தோணிராஜ், அந்தோனிப்பிச்சை, மரிய பாஸ்கர், வேல்நாடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், ஏராளமான பொதுமக்களும் பங்கேற்று பெருந்தலைவர் காமராஜருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

மேலும் நிகழ்ச்சியில் காமராஜரின் கல்விச் சேவை, எளிமை மற்றும் மக்கள் நலப் பணிகள் குறித்து நிர்வாகிகள் நினைவுகூர்ந்து பேசினர்.



## தூத்துக்குடியில் சி.எம்.என். ஷட்டில் கிளப் சார்பில் மாவட்ட அளவிலான இறகுப்பந்து போட்டி: மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தார்

தூத்துக்குடி மாநகராட்சிமேற்குமண்டலத்திற்கு உட்பட்ட சி.எம்.என்.ஷட்டில்கிளப்(CMN Shuttle Club) சார்பில், மாவட்ட அளவிலான சிறுவர்களுக்கான மற்றும் 8 மாவட்டங்களைச் சேர்ந்த ஆண்களுக்கான இறகுப்பந்து போட்டி, தூத்துக்குடி டி.சி.பி.சி. மேற்கு மண்டலம், அசோக் நகர் 2-வது தெருவில் நடைபெற்றது.

சி.எம்.என். ஷட்டில் கிளப்பின் தலைவரும், 34-வது வார்டு மாமன்ற உறுப்பினருமான சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில்,தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்தார்.

இந்தப் போட்டித் தொடரில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, மதுரை, விருதுநகர், தேனி மற்றும் சிவகங்கை ஆகிய 8 மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் உற்சாகமாக பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வை செயலாளர் வி.ரமேஷ் கார்த்திகேயன் மற்றும் சி.எம்.என். ஷட்டில் கிளப் நிர்வாகிகள் ஒருங்கிணைத்தனர். மேலும், பொதுமக்கள், விளையாட்டு ஆர்வலர்கள், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானோர் கலந்து கொண்டு போட்டியை உற்சாகப்படுத்தினர்.

## ஈரோடு மாவட்ட அளவில் ஆகாஷ் மைய மாணவர் நிகில் சிவானந்தன் நீட் தேர்வில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

ஈரோடு பெருந்துறை சாலை வீரப்பம்பாளையத்தில் உள்ள ஆகாஷ் கல்வி நிறுவனத்தில் நீட் தேர்



வுக்கான பயிற்சி பெற்ற மாணவர் நிகில் சிவானந்தன், தேசிய அளவிலான தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET-UG) 720 மதிப்பெண்களுக்கு 691 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். அகில இந்திய தரவரிசையில் 92-வது இடத்தைப் பிடித்துள்ள இவர், ஈரோடு மாவட்ட அளவில் முதலிடத்தைப் பெற்று மையத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். இச்சாதனை குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள மாணவர் நிகில் சிவானந்தன், அகில இந்திய அளவில் சிறந்த தரவரிசையைப் பெற்றதன் மூலம் தனது மருத்துவக் கனவு நனவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயின்ற மற்ற மாணவர்களான

ஆதியன் 647 மதிப்பெண்களும் (தரவரிசை: 1649), ஆராதனா விக்னேஷ் 645 மதிப்பெண்களும் (தரவரிசை: 1808), தீஸ்னா 590 மதிப்பெண்களும்(தரவரிசை:13726), அபிநவ் 587 மதிப்பெண்களும் (தரவரிசை: 14919) பெற்று தேர்ச்சியடைந்துள்ளனர். நாடு முழுவதும் சுமார் 20 லட்சத்திற்கும் மேல் மாணவர்கள் எழுதிய இத்தேர்வில், ஆகாஷ் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய அளவில் சிறப்பான தரவரிசைகளைப் பெற்றுள்ளனர். குறிப்பாக, அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களுக்குள் 4 மாணவர்களும், முதல் 50 இடங்களுக்குள் 20 மாணவர்களும், முதல் 100 இடங்களுக்குள் 56 மாணவர்களும் தேர்ச்சி பெற்று முன்னிலை வகிக்கின்றனர்.

கடந்த 37 ஆண்டுகால பாரம்பரியமிக்க ஆகாஷ் நிறுவனம்,நாடு முழுவதும் 425-க்கும் மேற்பட்ட கிளைகளுடன் நீட், ஜே.இ.இ, என்.டி.எஸ்.இ மற்றும் ஒலிம்பியாட் போன்ற போட்டித் தேர்வுகளுக்கு 4 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருவதாக நிறுவனத்தின் தமிழ்நாடு மண்டல விற்பனை தலைமை அதிகாரி பிரதீப் உன்னிகிருஷ்ணன் மற்றும் முதன்மை உதவி இயக்குநர் ராகவேந்திரா ஆகியோர் தெரிவித்தனர். இந்தச் சாதனை விளக்கத்தின் போது ஈரோடு கிளை மேலாளர் கோபிநாத் மற்றும் மைய நிர்வாகிகள் உடனிருந்தனர்.




மலேசியாவில் நடைபெற்ற உலக பள்ளி விளையாட்டு முய் தாய் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று, தமிழகத்திற்கும் ஈரோடு மாவட்டத்திற்கும் வரலாற்றுச் சாதனை தேடித்தந்த மாணவர் ஆர். நிகல்யன் ராஜ்.

மலேசியாவில் சர்வதேச அளவிலான உலக பள்ளி விளையாட்டு சாம்பியன்ஷிப் (World School Games Championship) முய் தாய் பாக்ஸிங் போட்டிகள் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. இப்போட்டியில் உலகெங்கிலும் இருந்து 102 நாடுகள் பங்கேற்றன. இந்திய நாட்டின் சார்பில் 35 வீரர்களும், அதில் தமிழகத்தின் சார்பில் 6 வீரர்களும் களம் கண்டனர். இதில், ஈரோடு 'தி ஆக்சன் ஜோன் அகாடமி' தற்காப்புக் கலை மையத்தில் பயிற்சி பெற்று வரும் மாணவர் ஆர். நிகல்யன் ராஜ் (R. Nikalyan Raj) முய் தாய் பாக்ஸிங் பிரிவில் மிகச்சிறப்பான திறமையை வெளிப்படுத்தி வெண்கலப் பதக்கம் வென்றார். இந்த உலகளாவிய போட்டியில் ஒட்டுமொத்த தமிழகத்தின் சார்பாகப் பதக்கம் வென்ற ஒரே ஒரு மாணவர் ஆர்.நிகல்யன் ராஜ் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோட்டை சேர்ந்த மாணவர் உலக அரங்கில் பதக்கம் வென்று சாதனை படைத்த விபரமறிந்து, மாணவரையும் அவரது பயிற்சியாளர்க ளையும் பாராட்டி வருகின்றனர் அதேபோல் இப்போட்டியில் பங்கேற்று உலக அரங்கில் திறம்பட விளையாடிய இதே அகாடமியைச் சேர்ந்த இளம் வீரர்கள் ஆர். நலன்ராஜ் மற்றும் வேதா ஆகியோருக்கு . உலக அரங்கில் நம் ஈரோட்டு மாணவர்கள் மக்களிடையேயும், விளையாட்டு ஆர்வலர்களிடையேயும் மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் ஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு மாவட்டம், கன்னப்பள்ளி, பி.கே.புதூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்றஅலுவலககட்டிடத்தினைவருவாய் மற்றும்பேரிடர்மேலாண்மைத்துறைஅமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர் நேற்று (18.07.2026) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த்மோகன், (மொடக்குறிச்சி ) து.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடுமாவட்டம்,கோபிசெட்டிபாளையம்நகராட்சிபகுதியில்நெடுஞ்சாலைத்துறையின்சார்பில்நிலக்கீல்தரக்கட்டுப்பாடுஆய்வககட்டிடத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று (18.07.2026) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் து.சண்முகன், கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சி, பேருந்து நிலைய வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மரக்கன்றினை நேற்று (18.07.2026) நட்டு வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் சுரண்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பி. மதுசூதனன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் 6ஆவது மாநில நிதிக்குழு ஆணைய மானியம் 202526ன்கீழ்6வதுவார்டுசிவகுருநாதபுரம்இந்துநாடார்திருமணமண்டபம்மேல்புறத்தில் உள்ள பகுதியில் ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக 200 இலட்சம் லிட்டர் கொள்ளளவுகொண்டமேல்நிலைநீர்த்தேக்கத்தொட்டிஅமைக்கும்பணிக்குஇரண்டாவது நிலை அமைக்கப்பட்டு, மூன்றாம் நிலை சென்டரிங் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.

## பனிமய மாதா திருக்கோயில் பேவர் பிளாக் பணிகளை மேயர் ஜெகன் பெரியசாமி ஆய்வு



தூத்துக்குடி மாநகரில் பிரசித்தி பெற்ற பனிமய மாதா திருக்கோயில் முன்பு மேற்கொள்ளப்பட்ட பேவர் பிளாக் கற்கள் பதிக்கும் பணிகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து,தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்., பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியில் உயர்கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் இரவு நேரங்களில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாகவும் வசதியாகவும் செல்ல முடியும் என்றும் மேயர் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது செயற்குழு உறுப்பினர் சி.எஸ். ராஜா, மாநகர மீனவரணி அமைப்பாளர் டேனி,மாநகரசிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் லாரன்ஸ், வட்டக் கழக நிர்வாகி ஆர்தர் மச்சாது, போல்பேட்டை பகுதி கழக பிரதிநிதி லிங்கராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



ஈரோடுமாவட்டம்,அட்டவணைப்புதூர்பகுதியில்புதிதாககட்டப்பட்டுள்ளஊராட்சிமன்றஅலுவலககட்டிடத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி , ஆகியோர் நேற்று (18.07.2026) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன், (மொடக்குறிச்சி )து. சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், சலங்கபாளையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலக கட்டிடத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி, ஆகியோர் நேற்று (18.07.2026) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பி.மேட்டுப்பாளையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தினை வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி , ஆகியோர் நேற்று (18.07.2026) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சட்டமன்றஉறுப்பினர்கள்(ஈரோடுமேற்கு)கா.க.ஆனந்த்மோகன்,(மொடக்குறிச்சி)து.சண்முகன்,கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சி, கரட்டூர் பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நுண் உரம் செயலாக்க மையத்திற்கான பணிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று (18.07.2026) துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் து.சண்முகன், பவானிசாகர் (தனி) சட்டமன்ற உறுப்பினர் வே.பெ. தமிழ்ச்செல்வி, கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன், கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டையில் புதிதாக கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மையக்கட்டிடத்தினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி , ஆகியோர் நேற்று (18.07.2026) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு மேற்கு)கா.க.ஆனந்த்மோகன், (மொடக்குறிச்சி) து. சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.

## 'Shouldn't test Sonam Wangchuk's limits, say yes or no to his demands': Anna Hazare's appeal to Centre



*Social activist Anna Hazare on Saturday urged the Union government to hold talks with educationist Sonam Wangchuk, saying discussions should be held on his demands after he was taken to Safdarjung Hospital by Delhi Police for treatment earlier in the day.*

*"The government should not test his limits. Say yes or no (to his demands), but what is wrong in holding discussions?" Hazare told news agency PTI.*

*Wangchuk has been demanding the resignation of Union Education Minister Dharmendra Pradhan over the NEET paper leak scandal.*

*Saturday (July 18) marks the 21st day of his indefinite hunger strike at Delhi's Jantar Mantar.*

*Hazare's appeal comes years after his own hunger strike in Delhi demanding the Lokpal Act, which rocked the UPA government in 2011.*

*Wangchuk taken to hospital*

*While the police said the hospitalisation was undertaken as per a Delhi High Court order on monitoring Wangchuk's health, CJP's Abhijeet Dipke claimed the climate activist was "taken away forcefully".*

*The CJP protesters at Jantar Mantar alleged that the police personnel arrived at the site and claimed to be a medical team. They ordered the volunteers to move aside, a protester was quoted as saying by ANI.*

*Cockroach Janata Party (CJP) chief spokesperson Saurav Das alleged that the Delhi Police had misinterpreted the Delhi High Court's directions while shifting Sonam Wangchuk to hospital and termed his detention a contempt of court.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.